මුදල් හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය
நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
MINISTRY OF FINANCE AND ECONOMIC AFFAIRS

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DMS/Cir/07/2018
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2018.11.21

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல: 04/2018

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறை சபைகள் மற்றும்

முழுமையாக அரசுக்குச் சொநதமான நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

**அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதி சட்டமுறைச் சபைகள் மற்றும் முழுமையான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தர்களுக்கு கருவளத்திற்காக சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு சம்பளமற்ற லீவுகளை வழங்குதல்.**

அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதி சட்டமுறைச் சபைகள் மற்றும் முழுமையான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தர்களுக்கு கருவளத்திற்காக சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு சம்பளமற்ற லீவுகளை வழங்குதற்காக CP18/1067/809/024 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2018.06.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

02. அதன் பிரகாரம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதி சட்டமுறைச் சபைகள் மற்றும் முழுமையான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் உத்தியோகத்தர்களுக்கு கருவளத்திற்காக சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு பிரசவ மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரின் பரிந்துரையின் அடிப்படையில் அதிகபட்சமாக ஒரு (01) வருட காலம் வரையில் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சம்பளமற்ற லீவுகளை அனுமதிக்க முடியும்.

03. மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து செயல்வலுப்பெறும்.

**ஒப்பம்/ எஸ்.ஆர். ஆட்டிகல**
திறைசேரி செயலாளர் மற்றும்
நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளர்

பிரதிகள் :

01. சனாதிபதியின் செயலாளர்
02. பிரதமரின் செயலாளர்
03. அமைச்சரவையின் செயலாளர்
04. கணக்காய்வாளர் அதிபதி
05. செயலாளர், தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு